1971 ஜூலை 21]

நல்லாற்றின் குறுக்கே உள்ள பாலம்

* 357 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா :

திருப்பூரிலிருந்து அவனுசி செல்லும் பாதையில் நல்லாற்றின் குறுக்கே உள்ள பாலம் பழுது பட்டிருப்பதால் அதை புதுப் பிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் சொன்னுர்கள். அந்தப் பாதை 22 அடி அகலம் உள்ள பாதையாக இருக்கிறது. பாலம் 12 அடி அகலம் இருக்கும் காரணத்தால் அடிக்கடி விபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, பாலத்தைப் புதுப்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாலத்தைப் புதுப் பித்துக் கட்டும் அளவுக்கு நிலைமை இல்லையென்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. இருந்தாலும் சில மராமத்துகள் செய்யப்பட்டிருக் கின்றன.

மதுரை நகரில் கட்டப்படும் மேம்பாலங்கள்

* 358 வினு—திரு. கு. திருப்பதி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா :

மதுரை நகரில் கட்டப்படும் இரண்டு மேம்பாலங்களின் வேலை எப்போது முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தேசிய நெடுஞ் சாலை எண். 7-ல் மைல் 300/2-ல் சுப்ரமணியபுரத்திற்கு அருகில் உள்ள மேம்பாலத்தின் பணி, 1972 பிப்ரவரியில் முடியலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலை எண். 7-ல், மைல் 300/7-ல் மீனுட்சி மில்லுக்கு அருகில் அமைக்கப்போகும் மேம் பாலத்திற்கான ஒப்பந்தப்புள்ளிகள், அண்மையில் அரசாங்கத் தால் அங்கீகரிக்கப்பட்டது. இப் பணியும் ஒப்பந்தக்காரரிடம் இடத்தை ஒப்புவித்த தேதியிலிருந்து 18 மாதங்களில் முடிவடையு மென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கு. திருப்பதி : சுப்பிரமணியபுரம் கேட்டுக்கு அருகே இருக்கும் பாலம் அமைக்கும் வேலை வேகமாக நடைபெறுகிறது. மீனுட்சி மில் அருகே கட்டப்படும் பாலம் வேலை துவங்காமல் இருக் கிறது. அதற்கு ஏதாவது குறிப்பிட்ட காரணம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குறிப்பிட்ட காரணம் ஒன்றும் இல்லை. மீனுட்சி மில் அருகே இடம் இப்போது தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இடத்தை ஒப்படைத்து 18 மாதத்தில் தொடங்கப்படும்.